(பதிப்புரிமையுடையது) உ



விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
8 சைவசமய பாடப்பரீட்சை : 2024
தரம் எட்டு



nselva.com

காலம்	1.30 மணி
புள்ளிகள் : 100	

இல.	
மாணவர்	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. (அ) மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. உப்பு நீரில் கரைந்திருப்பதைப் போல இறைவன் எங்கும் நிறைந்தவர் என்பதைக் கூறும் நூல் எது?
   1) வேதம் 2) உபநிடதம் 3) ஆகமம் 4) சித்தாந்தம்
2. மனித உடலின் அமைப்பிலேயே அமைக்கப்படுகின்ற ஆலயத்தின் வயிற்றைக் குறிக்கும் பகுதி.
   1) மூலஸ்தானம் 2) அர்த்தமண்டலம் 3) மகா மண்டலம் 4) நிருத்த மண்டலம்
3. இடக்கையால் வலது காதையும் வலக்கையால் இடது காதையும் பிடித்து வழிபடும் தெய்வம் எது?
   1) சனீஸ்வரன் 2) விநாயகர் 3) வைரவர் 4) முருகன்
4. கிரியைகளில் அடங்காதவை.
   1) அர்த்தசாமக் கிரியை 2) நித்திய கிரியை
   3) நைமித்திய கிரியை 4) காமிய கிரயை
5. பேரிருட் காலத்தில் என்றும் தனித்து நிற்பவர் யார்?
   1) சிவன் 2) விஷ்ணு 3) சக்தி 4) பிரம்மா
6. நாள் மங்கலத்தைச் சிறப்பாகக் கொண்டாடி கோயில்களுக்கு மானியம் வழங்கிய மன்னன்.
   1) இராஜேந்திர சோழன் 2) குலோந்துங்க சோழன்
   3) இராஜராஜ சோழன் 4) கரிகாலச் சோழன்
7. தில்லை மூவாயிரம் எனச் சிறப்பிக்கப்படுபவர்கள் யார்?
   1) அரசர்கள் 2) முனிவர்கள் 3) தேவர்கள் 4) பிராமணர்கள்
8. எம்பெருமானின் தூக்கிய திருவடிகளைப் பற்றிக் கொண்டவர்களை எது பற்றி வருத்தாது என சம்பந்தர் குறிப்பிடுகிறார்?
   1) வறுமை 2) பாவம் 3) துன்பம் 4) பயம்
9. வேப்பம் பூவையும் கரும்பு வெல்லத்தையும் கலந்து உண்ணும் பண்டிகை எது?
   1) தைப்பொங்கல் 2) புதுவருடப்பிறப்பு 3) தீபாவளி 4) ஆடிப்பிறப்பு
10. காளத்தி மலை மீது இருக்கும் இறைவன் யார்?
    1) திருமருகற்பெருமான் 2) திருத்தோணியப்பர்
    3) குடுமித்தேவர் 4) பெரியதம்பிரான்
11. திருமருகலில் உறையும் இறைவியின் பெயர் யாது?
    1) வண்டுவார் குழலி 2) கௌரியம்மை
    3) சிவகாம சுந்தரி 4) உமா மகேஸ்வரி

12. பாரணை என்பது.
    1) உணவை விடுத்து தியானத்தில் இருத்தல்.
    2) கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்குதல்.
    3) விரதத்தின் மறுநாள் அடியார்களுடன் உணவு உண்ணல்.
    4) ஏழை எளியவர்களுக்கு உணவு வழங்குதல்.

13. முருகனின் தோற்றம் நிகழ்ந்த நாள்.
    1) பங்குனி உத்தரம் 2) வைகாசி விசாகம்
    3) ஆவணி ஞாயிறு 4) ஆனி உத்தரம்

14. 63 நாயன்மாருக்கும் நடைபெறும் உற்சவம்.
    1) பிரமோற்சவம் 2) மகோற்சவம் 3) வசந்தோற்சவம் 4) பக்தோற்சவம்

15. சிவனிடம் சக்கரப் படையை அருளாகப் பெற்றவர் யார்.
    1) இந்திரன் 2) சக்தி 3) திருமால் 4) விநாயகர்

16. தனியடியார்களினதும், தொகையடியார்களினதும் தொகைகள் முறையே
    1) 60, 9 2) 63, 4 3) 9, 60 4) 64, 12

17. வருடத்திற்கு இரு மகோற்சவம் நடைபெறும் ஆலயம் எது?
    1) முன்னேஸ்வரம் 2) பொன்னம்பலவாணேஸ்வரம்
    3) திருக்கேதீஸ்வரம் 4) திருக்கோணேஸ்வரம்

18. உகந்தை முருகன் ஆலயத்துடன் தொடர்பில்லாத குன்று எது?
    1) சக்திகிரி 2) வள்ளி கிரி 3) சந்நியாசிமலை 4) நகுலகிரி

19. ''வாளன கண்மடவாள்'' என்ற தொடர் யாரைக் குறிக்கிறது?
    1) ஆண்டாள் 2) சங்கிலியார் 3) பரவையார் 4) மங்கையர்க்கரசியார்

20. ''இறைவனின் அருகில் வசித்தல்'' என்ற தொடருடன் பொருத்தமான கூற்று.
    1) விரதம் 2) உபவாசம் 3) அபிஷேகம் 4) திருவிழா

21. ஸ்ரீ பஞ்சாசர செபஞ்செய்வதற்கு யோக்கிய ஆவர் யார்?
    1) மதுபானமும் மாமிச போசனமும் இல்லாதவர். 2) ஆசாரம் உடையவர்
    3) சிவதீட்சை பெற்றவர் 4) மேற்கூறிய யாவரும்

22. பாலை நிலத்தை நெய்தல் நிலம் ஆகும்படி பாடல் பாடியவர்.
    1) சம்பந்தர் 2) சுந்தரர் 3) அப்பர் 4) திருமூலர்

23. **23ம் 24ம் 25ம்** வினாக்களுக்கு பொருத்தமான இணைப்புக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக.

அ) சம்பந்தர்	உ) தருமசேனர்
ஆ) அப்பர்	ஊ) வன்தொண்டர்
இ) சுந்தரர்	எ) புகலியர்கோன்
ஈ) மாணிக்கவாசகர்	ஏ) திருவாதவூர்

23. பொற்றாளம் பெற்றவரோடு தொடர்புடைய இணைப்புகள்
    1) ஈ, ஏ 2) இ, ஊ 3) ஆ, உ 4) அ, எ

24. ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற கூற்றோடு தொடர்புடைய வரிகளின் இணைப்பு
    1) ஈ, ஏ 2) இ, ஊ 3) ஆ, உ 4) அ, எ

25. சிவனடியார் அனைவருக்கும் தான் அடிமை எனக்கூறியவரோடு தொடர்புடைய இணைப்பு.
    1) ஈ, ஏ 2) இ, ஊ 3) ஆ, உ 4) அ, எ

(25 x 1 = 25 புள்ளிகள்**)**

(ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. உத்தாலகரின் மகனின் பெயர் யாது?
2. கோபுரத்தில் அமையும் சிற்பங்கள் எதனைக் காட்டுகின்றன?
3. நமஸ்காரம் பண்ணும் போது கால்களை எத்திசைகளில் நீட்டுதல் வேண்டும்?
4. இருவாரங்களுக்கு ஒருமுறை நிகழும் நைமித்திய கிரியை ஒன்று தருக.
5. மாசிமாத தேய்பிறை சதுர்த்தியில் நோற்கப்படும் விரதம் எது?
6. கண்ணப்பரின் தாயின் பெயர் யாது?
7. ''காப்பதோர் வில்லும் அம்பும்'' என்ற பாடல் யாருடைய அன்பையும் தோற்றத்தையும் புகழ்ந்து பாடப்பட்டது?
8. திருச்செங்காட்டங்குடியில் வாழ்ந்த நாயனார் யார்?
9. திருக்கேதீஸ்வரத்தில் திருஞானசம்பந்தர் மடத்தைக் கட்டியவர் யார்?
10. மாணிக்கவாசகர் எம்மன்னனுக்கு முதலமைச்சராக இருந்தார்?
11. ''ஈவது விலக்கேல்'' என்ற கூற்று இடம்பெறும் நூல் எது?
12. பஞ்ச பூதங்கள் இரண்டு தருக?
13. பசுவும், பாசமும் என்றும் அநாதியானது எனக்கூறும் நூல் எது?
14. இறைவனால் ''அம்மையே'' என அழைக்கப் பெற்றவர் யார்?
15. திருவகுப்பு, மயில்விருத்தம் பாடியவர் யார்?

(15 x 1 = 15 புள்ளிகள்**)**

பகுதி - II

1. பின்வரும் தொடக்கத்தையுடைய திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டினைப் பிழையின்றி எழுதுக. பாடியவரின் பெயரையும் எழுதுக.

1. "பக்தியால் யான் உனை ....."
2. "இறவாத இன்ப அன்பு வேண்டிப்....."
3. சிவசிவ என்கிலர் தீவி ....."
4. ஏக நாயகனை இமையவர்க்கு ....."

(2 x 5 = 10 புள்ளிகள்**)**

2. பின்வரும் தொடக்கத்தையுடைய குறட்பாக்களை பூரணமாக எழுதுக.

1. "இன் சொலால் ஈரம் ....."
2. "நன்றிமறப்பது நன்றன்று ....."
3. "சமன்செய்து சீர்தூக்கும் ....."
4. "அடக்கம் அமரருள் ....."
5. "நன்றிக்கு வித்தாகும் ....."

(5 x 1 = 5 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. ஆலயம் தொழுவது சாலவும் நன்று

1. ஆலயத்திற்குக் கொண்டு செல்லக்கூடிய பொருட்கள் ஆறு தருக?
2. ஆலயத்தில் விநாயகரை வணங்கும் முறையைத் தருக?
3. சூக்குமலிங்கம் என்றால் என்ன? அதன் வெளிப்படையான குறியீடு எது?

(3 + 4 + 2 = 9 புள்ளிகள்)

2. குருதி நீர் ஒழுக தன் கண் கோப்பதும் பற்றிக் கொண்டான்

1. கண்ணப்பர் பகலிலும் இரவிலும் இறைவனுக்குச் செய்த சேவை என்ன?
2. கண்ணப்பர் வழிபட்ட இறைவனின் பெயர் யாது? இவ் இறைவனை சிவாகம முறைப்படி பூசை செய்து வந்தவர் யார்?
3. கண்ணப்பரின் பக்தியை மெச்சி இறைவன் கொடுத்த வரம் யாது?

(4 + 2 + 3 = 9 புள்ளிகள்)

3. விரதங்கள் மனதை ஒரு நிலைப்படுத்தி பக்தி மார்க்கத்தில் ஈடுபட உதவும்.

1. பங்குனி உத்தர கல்யாணவிழா எதனை எடுத்துக் காட்டுகிறது.
2. விரதம் பற்றி ஆறுமுகநாவலரின் கூற்றினைத் தருக?
3. அபிஷேக தீர்த்தத்தால் அடியார்களுக்குக் கிடைக்கும் பயன்கள் எவை?

(3 + 3 + 3 = 9 புள்ளிகள்)

4. நாயன்மார்கள் தமது சித்தத்தைச் சிவன் பால் வைத்த அடியார்களாவார்கள்

1. குளிர்ச்சுரம் நீங்கப் பதிகம் பாடியவர் யார்? அவர் பாடிய பதிகத்தின் முதலடியை எழுதுக.
2. திருநாவுக்கரசரின் வேறு இரு பெயர்களைத் தருக. அவருக்கு ஏற்பட்ட நோய் எது?
3. சுந்தரரை வளர்த்த சிற்றரசர் யார்? இவர் திருவாரூரில் உள்ள எம்மண்டலத்தில் சிவனடியார்களைச் சந்தித்தார்? சுந்தரர் பாடிய முதற்தேவாரம் எது?

(2 + 3 + 4 = 9 புள்ளிகள்)

5. திருவாசகத்திற்கு உருகாதோர் ஒருவாசகத்திற்கும் உருகார்.

1. மாணிக்கவாசகர் அருளிய இருநூல்களைத் தருக? அது எத்தனையாம் திருமுறையில் அடக்கப்பட்டுள்ளது?
2. மாணிக்கவாசகரை எவ்வூரில் இறைவன் ஆட்கொண்டார்? பௌத்த அரசனை எவ்வூரில் வாதத்திற்கு அழைத்து மாணிக்கவாசகர் வெற்றிபெற்றார்?
3. மாணிக்கவாசகரின் தாய், தந்தையரின் பெயரையும் பிறந்த ஊரையும் குறிப்பிடுக. குதிரைகள் வாங்க மன்னன் கொடுத்த செல்வத்தை இவர் யாது செய்தார்?

(3 + 2 + 4 = 9 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் ஏதேனும் மூன்றிற்குச் சிறு குறிப்பெழுதுக.

1. சிவராத்திரி
2. விழுமியங்கள்
3. உபநிடதம்
4. பண்டிகைகள்
5. புராண இதிகாசங்கள்
6. நாட்டார் வழிபாடு

(3 x 9 = 9 புள்ளிகள்)

(5 x 9 = 45 புள்ளிகள்)